**UNIVERSITY OF PERADENIYA**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය පරීක්ෂණය 300 මට්ටම - මාර්තු 2025**
**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 300 வது தேர்ச்சி மட்டம் – மாசி- பங்குனி 2025**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level – February – March 2025**

# ECNE 301: Sri Lankan Economy

කාලය පැය (03) තුනයි.
**நேரம்: மூன்று (03 மணித்தியாலங்கள்**

Time: three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.**

Marks will be deducted for illegible handwriting.

ප්‍රශ්න **04** කට පිළිතුරු සපයන්න
**04 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
Answer **04** questions only.

**මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව** 07 කි
**இந்த வினாப்பத்திரத்தில்** 07 **வினாக்கள் உள்ளன.**
There are 07 questions in the question paper.

---

1 a) இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தோன்றிய முக்கிய அரசியல் ஆட்சி முறைமைகள் யாவை? (10 புள்ளிகள்)

b) பொருளாதார திறந்ததன்மை, கைத்தொழில்மயமாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் நலன்புரிக் கொள்கைகளின் அடிப்படையில் அவ் ஆட்சி முறைமைகளின் முக்கிய கொள்கைகளை விளக்குக. (15 புள்ளிகள்)

2. a) இலங்கையின் மெய்த் துறையினது முக்கிய போக்குகள் யாவை? இலங்கையின் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளின் 2018-2023 ஆண்டுக்கான தரவுகளைப் பயன்படுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

b) இலங்கையின் விவசாயத் துறையின் முக்கிய சிக்கல்களை அடையாளம் காண்க? (15 புள்ளிகள்)

3. a) இலங்கை அரசாங்கத்தின் பிரதான வருமான மூலங்கள் யாவை? (05 புள்ளிகள்)

b) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் அரசாங்க வருவாயில் உள்ள முக்கிய போக்குகள் மற்றும் சிக்கல்களை விளக்குக. (10 புள்ளிகள்)

c) "இறையாண்மைக் கடன் (Sovereign debt) என்பது அரசாங்க வருவாயினது நீண்டகால வீழ்ச்சியினது முக்கிய விளைவு ஆகும்". இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? மேலுள்ள கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. (10 புள்ளிகள்)

4. a) வர்த்தக திசை (trade direction) என்றால் என்ன? விளக்குக. (10 புள்ளிகள்)

   b) இலங்கையில் சென்மதிநிலுவைச் சமநிலையில் உள்ள முக்கிய சிக்கல்களை விளக்குக. (15 புள்ளிகள்)

5. a) ஊழியப் படையினது முக்கிய கூறுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

   b) இலங்கையின் ஊழியச் சந்தையில் உள்ள முக்கிய சிக்கல்களை சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

6. a) 2023 ஆம் ஆண்டின் IMF உடன்படிக்கையின் இலங்கைக்கான முக்கிய பரிந்துரைகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   b) 2024 ஆம் ஆண்டின் கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் பிரதான நேர்க்கணிய மற்றும் எதிர்மறை விளைவுகளை விளக்குக. (15 புள்ளிகள்)

7. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஐந்திற்கு சிறு குறிப்பு எழுதுக. (5x5 = 25 புள்ளிகள்)

   i. அரச நலன்புரிக் கொள்கைகள்
   ii. ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில்மயமாக்கல்
   iii. பணவீக்கத்தின் செலவு
   iv. பொருளாதார ரீதியாக பங்குபற்றல் சனத்தொகை (Economically active population)
   v. இறையாண்மைக் கடன் (Sovereign Debt)
   vi. இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கு (Foreign Reserves) மீதான நெருக்கடி

*************************